1989 மே 4] [திரு. சி. கோவிந்தராஜன்]

எங்களுடைய நிலையைச் சொல்லிவிட்டு வெளிநடப்புச் செய்தோமே தவிர நாங்கள் வராமலேயே இருந்துவிட்டோம் என்று, எங்களுடைய கட்சியைக் களங்கப்படுத்துவதுபோல, மாசு படுத்துவதுபோல, திரித்துக் கூறுவதும், உண்மைக்குப் புறம்பாக எழுதுவதும் இந்த அவையினுடைய உரிமையை மீறக் கூடிய குற்றமாகும் என்று நான் இங்கே கூற பிரியப்படுகிறேன்.

''ஒரு காலத்தில், கல்கி அவர்கள் கூறினார்கள் கம்யூனிஸ்ட்டுகள் கோட்டையை விட்டாலும் விடுவார்களே தவிர, கொள்கையை விடமாட்டார்கள்'' என்று எனவே நாங்கள் சந்தர்ப்பவாதிகள் அல்ல, எங்களுடைய கொள்கையை எடுத்துச் சொல்லி விட்டு நாங்கள் வெளிநடப்பு செய்தோம்.

நடக்காத ஒன்றை நடந்ததாகக் கூறி, இப்படி எழுதியிருப்பது இந்த அவையினுடைய உரிமையை மீறக்கூடிய செயலாகும் என்று கூறி, இதை உரிமைக் குழுவிற்கு விட வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுகுறித்து நாளேட்டின் ஆசிரியரிடமிருந்து விளக்கம் கேட்டு, பின் எனது தீர்ப்பை அளிக்கிறேன்.

என்னிடத்திலே இசைவு கேட்டபடி திரு. கோ. பூவராகன்.

2. தகவல் கோரல் தொடர்பு

(இ) நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்திற்காக இடங்களைக் கொடுத்தவர்களுக்கு நிவாரணம் அளித்தல்

* திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலியிலே நிலக்கரிச் சுரங்கத்திற்காக இடங்களையெல்லாம் எடுத்த மக்கள் பாதிக்கப்பட்ட சூழ்நிலையிலே இருந்து, அவர்களுக்காக நம்முடைய தமிழ்நாடு அரசாங்கம், அவர்களுடைய குறைகளைப் போக்குவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே சொல்லி, அவர்களுக்கு வீட்டுமனை வழங்கவும் அவர்கள் நிலங்களுக்கு வேண்டிய பணத்தைக் கொடுக்கவும், வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுக்கவும் என்று அங்குள்ள அது சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களை வைத்துப் பேசி, ஒரு நல்ல தீர்வு காண வேண்டுமென்று சொல்லியிருந்தார்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[திரு. கோ. பூவராகன்] 1989 மே

இதுவரையில், ஒருவித நடவடிக்கையும் எடுக்காததினால் ஒரு பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். விரைவிலே நல்லதொரு முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இதுகுறித்து ஏற்கனவே இந்த மன்றத்திலே மாண்புமிகு பூவராகன் அவர்கள் பிரச்சினையை எடுத்துச் சொல்லி, நானும் விளக்கம் அளித்திருக்கின்றேன்.

நெய்வேலியிலே பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு வேலை வாய்ப்பு தருகின்ற முன்னுரிமைகள் பற்றியும், காலி செய்யப் படுகின்ற கிராமப் பகுதிகளிலே அவர்களுக்கு உரிய இழப்பீட்டுத் தொகை தர வேண்டுமென்பது பற்றியும், உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு நல்ல முடிவுகளை எடுத்திட வேண்டுமென்று, மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

முன்பே, மாவட்ட ஆட்சித் தலைவரும், திரு. பூவராகன் அவர்களும், மற்றும் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி போன்றவர்களும் அங்கே கலந்து பேசி, அதற்கு ஆவன செய்வதாக அந்த நிர்வாகமும் உறுதி அளித்திருக்கிறது; என்னிடத்திலும்கூட அத்தகைய உறுதி நிர்வாகத்தின் சார்பாக அளிக்கப்பட்டிருக்கின்றது.

மாவட்டக் கலெக்டர் அவர்கள் தொடர்ந்து அந்த முயற்சியிலே ஈடுபட்டு, விரைவில் அங்கே, அந்தச் சுரங்கத்தினுடைய விரிவாக்கம் அமைவதற்கு ஏற்ற வண்ணம் இந்தச் செயல்பாடுகளையெல்லாம் அவர்கள் நிறைவேற்றித் தருவார்கள் என்று நான் நம்புகின்றேன்.

எனவே, இந்தப் பிரச்சினையை இந்த அளவில் விட்டுவிடலாம் என்று நான் கருதுகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS